2023 ஏப்ரல் 20]

198—

சுற்றுச்சுவர்

***21481—திரு. கி. அசோக்குமார்:**

மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி ஒன்றியம், பைனபள்ளி ஊராட்சிக்குட்பட்ட முஸ்லிம்கள் மயானத்திற்கு சுற்றுச்சுவர் கட்டித்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள மசூதிகள், மதரசாக்கள், தர்காக்கள் ஆகியவற்றைப் பழுதுபார்ப்பதற்கும், பராமரிப்பதற்கும் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில் 1999 ஆம் ஆண்டு பெருமராமத்து மானியத் திட்டத்தின்கீழ் மானியம் வழங்கும் திட்டத்தைத் துவக்கிவைத்தார்கள். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கிருஷ்ணகிரி மாவட்டம், பைனபள்ளி ஊராட்சி, ஒந்தலம்பள்ளியில் அமைந்துள்ள மஸ்ஜித் பிலால் பள்ளிவாசல் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தில் பதிவு செய்யப்படாமல் உள்ளது. நடப்பு நிதியாண்டில்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மராமத்துப் பணிகளுக்காக 10 கோடி ரூபாய் வழங்கியுள்ளார்கள். எனவே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற அடக்க ஸ்தலத்தை வக்ஃப் வாரியத்தில் பதிவு செய்து, அந்தக் கோரிக்கையினை வைத்தால் உடனடியாக சுற்றுச்சுவர் கட்டுவதற்கு நிதி ஒதுக்கித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார் அவர்கள்.*

திரு. கி. அசோக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதி, கிருஷ்ணகிரி நகராட்சி, பழையபேட்டை 1-வது வார்டில் உள்ள சாஹி*

பள்ளிவாசல் அருகில் உள்ள அடக்கஸ்தலத்தை ஒட்டி வக்ஃப் வாரியத்திற்குச் சொந்தமான 25 சென்ட் நிலம் உள்ளது. ஏற்கெனவே உள்ள அடக்க ஸ்தலத்தில் அடக்கம் செய்ய இடம் இல்லாததால், வக்ஃப் வாரியத்திற்குச் சொந்தமான இடத்தை அடக்க ஸ்தலத்திற்கு ஒதுக்கீடு செய்து, சுற்றுச்சுவர் அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய வினா நியாயமானது. வக்ஃப் வாரியத்திற்குச் சொந்தமான இடம் அதனருகில் இருந்தால், அதை நிச்சயமாக ஒதுக்கீடு செய்து, அதற்கு சுற்றுச்சுவர் அமைத்துத் தரப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார் அவர்கள். தருகிறேன் என்று சொல்லிவிட்டார்கள். நன்றி சொல்லி, முடித்துவிடுங்கள்.*

திரு. கி. அசோக்குமார்: *இல்லை தலைவரே, இது முக்கியமானது. சிறுபான்மையினர் பிரிவு பற்றி கேட்கக்கூடியது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதி, கிருஷ்ணகிரி நகராட்சி, மில்லட் நகரில் 4-வது வார்டில் அமைந்துள்ள வக்ஃப் வாரியத்திற்குச் சொந்தமான இடத்தில் வறுமைக்கோட்டிற்குக்கீழ் சுமார் 200 குடும்பங்களைச் சேர்ந்த சிறுபான்மையின மக்கள் வசித்து வருகின்றனர். தற்போதுள்ள வீடுகள் பழுதடைந்து, குடியிருப்புக்கு உகந்தவையாக இல்லை. மேலும், கழிவுநீர்க் கால்வாய், குடிநீர் வசதி, கழிவறை போன்ற வசதிகளும் இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், அந்த இடத்தில் வசிக்கின்றவர்களுக்கு வக்ஃப் வாரியத்திலிருந்து, அரசால் வழங்கப்படுகின்ற சலுகைகள் கிடைக்கப்பெறுவது இல்லை. எனவே, கழிவுநீர்க் கால்வாய், வீடுகள், கழிப்பறை போன்றவற்றைக் கட்டித்தர வக்ஃப் வாரியம் முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

2023 ஏப்ரல் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–35

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தாயுள்ளத்தோடு இந்த முறையும் 10 கோடி ரூபாய் நிதியினை வழங்கியுள்ளார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கையினை மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்கு எடுத்துச்சென்று அங்கே அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக, இந்த நிதித் தேவையினை உணர்த்தி, அதைப் பெற்றுத் தருவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 199, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

199—

உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டடம்

***11932— டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *விராலிமலை தொகுதி, அன்னவாசல் பேரூராட்சியில் உள்ள அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“ஓடி வந்த இந்திப் பெண்ணே கேள், நீ தேடி வந்த கோழையுள்ள நாடு இதுவல்லவே” என்று தன்னுடைய 13–வது வயதில் போர்ப்பரணி பாடி, தன்னுடைய 86 வயதில் அந்த மொழிக்கு செம்மொழி என்கின்ற அந்தஸ்தைப் பெற்றுத் தந்த முத்தமிழறிஞர் கலைஞர் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களைப் பற்றி, அவர்